**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் விடயங்களில் நியாயமான பெறுமதி ஒவ்வொரு 03 வருடங்கள் அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு | மீள்மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கனிசமான செலவினம் செய்ய வேண்டியிருந்தமையால் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| செய்ய வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பணிகளை மேற்கொள்ளுதல் பிரச்சினை உடையதாக காணப்படுகின்றது. | காண்பிப்பதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உயர் கல்வியை விரிவுபடுத்துதல் மற்றும் துரிதப்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (AHEAD) செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 667,177,005 கூட்டுத்தொகை நிதியல்லா சொத்துக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்கள் மற்றும் பட்டபின்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக கணக்குகளில் பதிவதற்கு முடியுமாக இருந்த போதிலும் சிவில் வேலைகளுக்காக மேலும் கட்டிட வேலைகளை பூர்த்தி செய்து கையளிக்காத நிலைமையில் கணக்கீடு செய்வதில் பிரச்சினையுடனாக இருந்தது. | செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட பணம் நிதியல்லா சொத்துக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிப்புக்கு உட்பட்ட களஞ்சியத்தில் மற்றும் அலுவலகத்தின் பொருட்களில் 118 வகையான விடயங்களின் பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்பீட்டுக்கு உட்பட்ட விடயங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இயந்திரங்கள், கணனிகள் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 45,678,090 | 633,670 | 45,044,420 | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தவறுகள் ஏற்படாத வகையில் சரியான பிரகாரம் கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | இடர் கடன் | 38,052,194 | 38,657,905 | 605,711 | விடயப் பொறுப்பு முகாமைத்துவ உதவியாளரால் தயாரிக்கப்பட்ட பட்டோலையில் | நிதிக் கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கையின் மீதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | | வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. | இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் 502(2) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 10,098,028,652 ஆன ஆதனங்கள் பொறிகள், மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 502(2) ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டை பேணிச் செல்வதற்காக தற்போது நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றது. | நிறுவனத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற சொத்துக்களின் பெறுமதி உரியவாறு இனங்காண்பதற்கு முடியுமான வகையில் நிலையான சொத்துப்பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேகாலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற நடைமுறை வங்கி கணக்கிற்குரிய 2022 சனவரி முதல் 2023 ஏப்ரல் வரையான வங்கி அறிக்கைகளை பரீட்சிக்கும் போது ஒவ்வொரு மாதமும் ரூபா 02 மில்லியன் முதல் ரூபா 06 மில்லியன் வரையான வீச்சில் மீதியொன்று காணப்பட்டது. நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற மீதிக்காக வட்டித் தொகையும் கிடைக்காமையினால் நாளாந்த தேவைக்காக போதியளவான பணம் கணக்கில் நிறுத்தி வைத்து மிகைப்பணத்தை உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் சேமிப்புக் கணக்கொன்றில் அல்லது குறுங்கால நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | குறைவாக பயன் படுத்தப்படுகின்ற நிதி நிறுவனத்தின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கோ அல்லது முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 115,032,758 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 132,500,160 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 17,467,402 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சம்பள செலவினம், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள், பராமரிப்பு செலவினம், பயிற்சி செலவினம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணங்களாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் நான்கு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்த கம்பனிக்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 36,989,498 முற்பண தொகையும் மற்றும் ரூபா 13,941,163 ஆன இடைக்கால கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. காணியின் உரித்து தொடர்பாக எழுந்த சட்டரீதியான பிரச்சினைகளின் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் இந்த நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவனம் தவறியிருந்தது. | 2022.12.23 ஆந் திகதி இது தொடர்பாக Zoom கலந்துரையாடல் ஒன்று சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வழக்குடன் தொடர்பான ஏனைய தரப்பினருடன் சட்ட உத்தியோகத்தரால் நடாத்தப்பட்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களம் மீண்டும் அந்த வழக்கு 2023.07.27 ஆந் திகதி கோரப்படுவதாக அறிவித்துள்ளது. | காணியின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கிய உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சுத்திகரிப்பு சேவை பெறுகைகளுக்குரிய பெறுகைகள், சட்டங்கள், விதிகள் மற்றும் விதிப்பிரமாணங்களை மீறியமை தொடர்பாக நிறுவனத்தில் இருந்த பணிப்பாளர் நாயகம் மற்றும் 08 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது குற்றத்திற்கு உட்பட்டதன் காரணமாக பணிப்பாளர் நாயக பதவியில் இருந்து நீக்குவதற்கும், 08 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2023 யூன் 09 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய 08 உத்தியோகத்தர்களுக்கும் எதிராக நடைபெற்ற முறையான ஒழுக்காற்று விசாரணை தற்போது முடிவடைந்துள்ளதுடன் கூடிய விரைவில் இந்த அறிக்கையை வழங்குமாறு ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகளை மீறியமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பட்டப்பின் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக 04 உத்தியோகத்தர்களுக்கு 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி செயற்திட்டத்தின் (HETC) மூலம் 2014 | அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தாமதமின்றி உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,371,400 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் பாடநெறியைப் பின்பற்றாதிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலவிடப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 5,915,000 தொகை செலவில் கண்டி உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் பொருத்தப்பட்டுள்ள சூரிய வலுச்சக்தி முறைமை 2021 ஒக்டோபர் மாதம் முதல் செயலிழந்து காணப்படுவதுடன் அதனை பொருத்திய நிறுவனத்தால் உற்பத்தி வழுக்கலுக்காக 10 வருட காலம் மற்றும் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மின்சக்தி செயற்திறனுக்காக 25 வருட உத்தரவாத காலம் என்பன வழங்கப்பட்டிருந்த போதிலும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறாது இருந்ததுடன் செயற்பட்ட 06 வருடத்தில் ரூபா 1,056,918 மின் உற்பத்தி வருமானம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | உரிய சூரிய சக்தி முறைமை ஸ்தாபித்தல் J.Lanka கம்பனிக்கு சரியான பிரகாரம் உரிய சேவை மற்றும் நவீனமயப்படுத்தலை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் அதற்காக காண்பிக்கப்படுகின்ற முயற்சி திருப்திகரமானதாக இருக்கவில்லை. | உத்தரவாத காலத்தில் காணப்படுகின்ற வலுக்கலை சிறந்த நிலைக்கு கொண்டு வந்து முறைமையில் ஆகக் கூடிய நலன்களை பெற்றுக்கொள்வதில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தம்பவெல உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கட்டிடம் ஒன்று நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டு 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் 2022 யூன் வரையில் தாமதமடைந்தமையினால் 2021 சனவரி முதல் 2022 மே மாதம் வரை நீர், மின்சாரம், மற்றும் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்காக செலவிடப்பட்ட 4,983,214 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. | கொவிட் 19 நிலைமை பரவலடைந்தமையால் நாட்டில் சகல உயர் தொழில்நுட்ப நிறுவனங்களும் மாணவர்கள் வரவழைத்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2022 செப்தெம்பர் முதல் மாணவர்களை அழைத்து கல்விசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கல்விசார் நடவடிக்கைகள் வரைறுக்கப்பட்ட காலத்தில் செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெஹிவளை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மின்சார செலவினத்தை குறைக்கும் நோக்கில் சூரியவலு சக்தி முறைமை பொருத்தும் நோக்கில் உரிய ஆரம்ப பணிகள் ரூபா 19,784,000 செலவில் 2019 யூன் 07 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் முறைமையை அமுல்படுத்துவதற்காக மொத்த மின்சார இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு 2023 யூன் 09 ஆந் திகதி வரை நிறுவனம் தவறியமையின் காரணமாக 2019 யூன் முதல் 2022 திசெம்பர் 31 வரை நிறுவனத்தின் மின்சாரத்திற்காக ரூபா 4,445,646 தொகையை செலவிட வேண்டியிருந்தது. | ஆளுகைச் சபையினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் மொத்த மின்சார இணைப்பை பெற்றுக்கொள்வதற்கு உரிய முற்பெறுகை செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டு புதிய பெறுகை நடவடிக்கைகள் ஊடாக இந்த செயற்திட்டத்திற்காக ஆலோசனையாளர் மற்றும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை குழுவின் புதிய தலைவரை நியமிக்கும்மாறு அமைச்சிற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | மொத்த மின்சார இணைப்பை விரைவாக பெற்று நிறுவனத்தின் மின்சார செலவினத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுககப்படல் வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ரூபா 18,305,976 பெறுமதியான இரத்தினபுரியில் அமைந்துள்ள காணி, உத்தியோகபூர்வ இல்லம், மற்றும் விளையாட்டு மைதானத்திற்காக பயன்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 1,000,000 தொகை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதும் எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு 2023 யூன் 09 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தமையால் 06 வருட காலத்தில் இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாமையினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,000,000 நிதி பயனற்ற செலவினமாக இருந்தது. | மிகுதி ரூபா 17 மில்லியனை செலுத்துவதற்கு போதியளவான பணம் திறைசேரி விடுவிக்காமையினால் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதியில் பயனற்ற செலவினங்களை செய்யாதிருந்தல் வேண்டும். |
| (ஆ) நூலக நடவடிக்கைகளுக்காக புதிய தொழில்நுட்பம் ஒன்றை பேணிச் செல்வதற்காக KOHA கணனி முறைமைக்காக உபகரணங்களை கொள்வவனவு செய்தல் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 1,013,315 செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த முறைமை அமுல்படுத்தாமையின் காரணமாக | KOHA கணனி முறைமை தொடர்பாக செயலமர்வுகளை நடாத்துதல், உபகரணங்களை கொள்வனவு செய்தல் பிரதான அலுவலகத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் | |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் இந்த செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | அந்த கணணி தரவு முறைமை தொடர்பாக நடாத்தபபட்ட செலயமர்வுகள் உரிய தரவுகளை உள்ளடக்குதல் தற்போது மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்பட்ட ஆதனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான அலுவலகம் நடாத்திச் செல்லும் நோக்கத்துடன் 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி செயற்திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களில் ஐந்து மாடிக் கட்டிடமொன்று தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு ரூபா 20,486,321 செலவில் 03 மாடிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 21 ஆந் திகதியில் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மிகுதி 02 மாடிகளின் வேலைகள் நிறைவேற்றாமையின் காரணமாக அந்த கட்டிடம் கையளிக்கப்பட்ட திகதியில் இருந்து பயனற்றுக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கட்டிடத்தை பூர்த்தி செய்யாமையின் காரணமாக பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2017 மார்ச் முதல் 2022 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 55,101,948 வாடகைச் செலவினம் ஒன்றை நிறுவனத்திற்கு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | முதலாவது கட்டத்தின் மூன்று மாடிகளையும் பயன்படுத்தப்படுவதாயின் கட்டிடத்தில் மேலும் சில செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வாடகை அடிப்படையில் காணப்படுகின்ற கட்டிடத்தின் உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் பரிந்துரையின்படி மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கட்டிடத்தை நிர்மாணித்ததால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |